# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,240 - 1964 නොවැම්බර් 27 වැනි සිකුරාදා — 1964.11.27

14,240 ம இலக்கம்—1964 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### விலைக்கட்டளைகள்

**உணவு விலைக்கட்டளை இல. எம். எல். 1964/5.**

**உப உணவுப் பொருட்கள் (மேலதிக விலை)**

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (பந்தி 173) 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மாத்தளை பரிபாலன மாவட்ட பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) விக்டர் சந்திரலக பண்டார உனன்தென்ன ஆகிய யான் இக்கட்டளையால்.—

(1) 1964 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ம் திகதி வெளிவந்த 14,190 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 28.10.64 ந் திகதியைக் கொண்ட எம். எல். 1964/4 ம் இலக்க உணவு விலைக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் 2 ம் அட்டவணையின் 3 ம், 4 ம் பந்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை முறையே குறித்த சட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரசபைப் பிரதேசத்துக்கு மொத்த அந்தரொன்றுக்கு விதிக்கப்பட்ட விலையுடன் மேலதிகவிலையாகக்கூட்டி விற்கப்படும் மொத்த வியாபாரி ஒருவரின் ஆகக்கூடிய மொத்த வியாபார விலையாகவும் குறித்த சட்டத்தின் கீழ் கொழும்பு மாநகரசபை பிரதேசத்துக்கு நிகர இருத்தலொன்றுக்கு விதிக்கப்பட்ட விலையுடன் மேலதிக விலையாக கூட்டி விற்கப்படும் சில்லறை வியாபாரி ஒருவரின் ஆகக்கூடிய சில்லறை வியாபார விலையாகவும் குறித்த அட்டவணையின் நேரொத்த 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக குறித்த அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள (1 ம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளபடி) மாத்தளை மாவட்ட எல்லைக்குள் விற்கலாகாதெனவும் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கங்களுக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையில் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இச்கட்டளையால் ஆகக்கூடிய விலைகளை விதிக்கப்பட்டுள்ள எந்த ஒரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது விற்கலாகாதென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்டட ஆகக்கூடிய விலையை ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி, அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்குகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" அல்லது "இரு." என்பது அவ்வோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(8) இரண்டாம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து குறித்த அட்டவணையின் மூன்றும் நாலாம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளுள் அவ்வாறு விதிக்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 23 ம் திகதி காலை 9 மணிக்கு மாத்தளையில் கையொப்பமிடப்பட்டது.

வீ. சீ. பீ. உணன்தென்ன,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தளை மாவட்டம்.

## முதலாம் அட்டவணை

எல்லை 1. கூம்பியாங்கொட, கொட்டுவெகெதற, அனுவிகார தவிர்ந்த மாத்தளை மாநகரசபை எல்லை.

எல்லை 2. (அ) மாத்தளை மாநகரசபை எல்லை, ஒவிலிகந்த, பரநாகன்தென்ன தவிர்ந்த மாத்தளை காரியாதிகாரியின் பகுதி.
(ஆ) வெகிஹூல, பொல்வத்தகந்த, வெலங்கஹூவத்த, அம்பன்கங்க கோறலே, தவிர்ந்த ரத்தோட்டை காரியாதிகாரியின் பகுதி.
(இ) கூம்பியாங்கொட, கொட்டுவேகெதற, அனுவிகார, மாத்தளை மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும்.

எல்லை 3. (அ) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி.
(ஆ) கலேவெல காரியாதிகாரியின் பகுதி.
(இ) அம்பன்கங்ககோறளே (பகுதி) வெஹீகல, ரத்தோட்டை காரியாதிகாரியின் பகுதி, பொல்வத்தகந்த, வெலங்ஹகவத்தே.
(ஈ) அம்பன்கங்ககோறளே (பகுதி) தம்புள்ள காரியாதிகாரியின் பகுதி.
(உ) பரநாகன்தென்ன, ஒவிலிகந்த, மாத்தளை காரியாதிகாரியின் பகுதி.

எல்லை 4. லக்கல காரியாதிகாரியின் பகுதி.

## இரண்டாம் அட்டவணை

| பந்தி 1<br>பொருளின் விபரம் | பந்தி 2<br>எல்லை | பந்தி 3<br>கொழும்பு மாநகரசபைக் கென்று மொத்த அந்தருக்கு விதிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் மொத்த வியாபார விலைக்கு மேலதிகமாகக் கூட்டி விற்கப்பட வேண்டிய மேலதிக விலை<br>ரூ. ச. | பந்தி 4<br>கொழும்பு மாநகரசபைக் கென்று நிகர இருத்தலுக்கு விதிக்கப்பட்ட சில்லறை வியாபாரியின் சில்லறை வியாபார விலைக்கு மேலதிகமாகக்கூட்டி விற்கப்படவேண்டிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| வெங்காயம் (ஈரவெங்காயம், சிக்பெல்லாப்பூர் தவிர்ந்த இதர ரகங்கள்) | 1 | 2 55 | 0 02 |
| | 2 | 2 95 | 0 03 |
| | 3 | 3 35 | 0 04 |
| | 4 | 3 95 | 0 05 |
| கொத்தமல்லி | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| முழு உழுந்து | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| பாசிப்பயறு | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| துவரம்பருப்பு | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| கடலைப்பருப்பு | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| புளி | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |
| உருளைக்கிழங்கு | 1 | 2 55 | 0 02 |
| | 2 | 2 95 | 0 03 |
| | 3 | 3 35 | 0 04 |
| | 4 | 3 95 | 0 05 |
| சிறு வெங்காயம் | 1 | 3 55 | 0 03 |
| | 2 | 3 95 | 0 04 |
| | 3 | 4 35 | 0 05 |
| | 4 | 4 95 | 0 06 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப் பொருட்களை விற்றலாகாது.

11–1145

உணவு விலேக்கட்டளை இலக்கம் : என். ஈ. 93. உப உணவுப் பொருட்கள்

## விலேக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

விலேக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினல் (அதிகாரம் 173) விலேக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) க்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அமரவன்ச பண்டார எல்கடுவ ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ம் திகதியைக் கொண்ட 13,308 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் திகதி வெளியான என். ஈ. 81 ம் இலக்க விலேக்கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(2) விலேக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அதிகாரம் 173) படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை கொழும்பு நகரசபை எல்லேக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலேயோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணை 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கிற தொகையைக்கூட்டி முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த விலேயாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். 2 ம் 3 ம் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை 1 ம் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் 1, 2, 3, 4, 5, 6 ம் எல்லேகளுக்குள் இந்த விலேகளுக்குக் கூடுதலாக விற்கலாகாது.

(3) விலேக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அதிகாரம் 173) படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை கொழும்பு நகரசபை எல்லேக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலேயோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 3 ம் அட்டவணை 2 ம் பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும் தொகையைக்கூட்டி முறையே நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலேயாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். 2 ம் 3 ம் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை 1 ம் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் 1, 2, 3, 4, 5, 6 ம். எல்லேகளுக்குள் இந்த விலேகளுக்குக் கூடுதலாக விற்கலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான உணவுப்பொருட்களையோ திருப்பி விற்றல் அல்லது மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்று ஆக்ஞையிடுகிறேன் ;

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான உணவுப் பொருட்களையும் பாவிப்புக்காகவோ அல்லது உபயோகத்துக்காகவோ விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்று ஆக்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலேகள் விதிக்கப்பட்ட எல்லேகளுக்குள் எவராவது 2 ம், 3 ம் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை வேறு பொருட்களோடு கலந்து விற்கலாகாது.

(6) அட்டவணை 2, 3 ல் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அப்பொருட்களுக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலேகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலேகள் விதிக்கப்பட்ட எல்லேகளுக்குள் 2 ம், 3 ம் அட்டவணைகளின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை மொத்த விற்பனை செய்யும் ஒவ்வொருவரும், சில்லறை விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்கப்பட்ட பொருளின் விபரம் ;

(இ) விற்கப்பட்ட பொருளின் நிகர நிறை ;

(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலே ;

(உ) எவ்விதமான விற்பனை ? மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) அட்டவணை 2, 3 ல் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்களை விற்கும்போது சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக்கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலேயும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளை உடகேவாகெட்ட பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிக்குச் செல்லுபடியாகாதெனவும் ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் திகதி 11.30 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் வைத்துக் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எல்கடுவே,
உதவி விலேக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
நுவரெலியா மாவட்டம்.

### 1 ம் அட்டவணை

1 ம் எல்லே கிராம சேவையாளரின் பகுதிகள் :

மாவெல, மாஸ்வெல, மொரப்பே, கடதோர, ஹபுகஸ்தலாவ, தொருவாதெனிய, ரங்கல, நவன்கம, கலப்பிடிய, ஹேதுனுவாவ, ராவணகொட, விஜேபாகுகந்த, கொட்டகலே, தல்வாக்கலே, அக்கரப்பத்தனே.

2 ம் எல்லே கிராம சேவையாளரின் பகுதிகள் :

மேத்தகம, மடக்கும்புர, கடதோரப்பிட்டிய, துனுக்கேதெனிய, கும்பல்ஒழுவ, நியங்கன்தொர, சங்கிலிப்பாலம, ரம்பொடகம, பணங்கம்மன, ரம்பொடை டவுன், கொட்டகேப்பிட்டிய, திஸ்பனே, வடத்தர, ரொஜசன்கம.

3 ம் எல்லே கிராம சேவையாளரின் பகுதிகள் :

நுவரெலியா, கந்தப்பளை, நானுஓயா, நில்தண்டாஹின்ன, ஹராஸ்பத்தை, வத்துமுல்லே, பட்டிப்பளை, ஹொரண்டிகலே, கெட்டக்கந்தும, திப்பட்டுக்கொட, பன்னல, கும்பல்கமுவ.

4 ம் எல்லை கிராம சேவையாளரின் பகுதிகள் :

ராகலை, ருபஹா, மாலியத்த, குருப்பனுவெல, அம்பலியத்த, அருக்வத்த.

5 ம் எல்லை கிராம சேவையாளரின் பகுதிகள் :

உடமாதுர, கலகன்வத்த, கல்கெட்டிவெல, அம்பன்எல்ல, தெனம்புரே, கும்புக்வெல, பட்டகொல்ல, மதுல்ல.

6 ம் எல்லை கிராம சேவையாளரின் பகுதிகள் :

பொகந்தவெல.

**2 ம் அட்டவணை**

| 1 ம் பத்தி<br>விபரம் | 2 ம் பத்தி<br>விபரம்<br>எல்லை 1 | எல்லை 2 | எல்லை 3 | எல்லை 4 | எல்லை 5 | எல்லை 6 |
|---|---|---|---|---|---|---|
| வெங்காயம் (சிக்பெலாபூர் தவிர்ந்த எல்லா ரகமும்) .. .. | 1 90 | 2 05 | 2 20 | 2 35 | 2 45 | 2 55 |
| உருளைக்கிழங்கு .. .. | 1 90 | 2 05 | 2 20 | 2 35 | 2 45 | 2 55 |
| கொத்தமல்லி .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| முழு உழுந்து .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| பாசிப்பயறு .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| துவரம்பருப்பு .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| கடலைப்பருப்பு .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| புளி .. .. | 2 90 | 3 05 | 3 20 | 3 35 | 3 45 | 3 55 |
| சின்ன வெங்காயம் .. .. | 1 90 | 2 05 | 2 20 | 2 35 | 2 45 | 2 55 |

**3 ம் அட்டவணை**

| 1 ம் பத்தி<br>விபரம் | 2 ம் பத்தி<br>விபரம்<br>நிகர இருத்தல் ஒன்றுக்கு கொழும்பு நகரசபை எல்லைக்குள் நியமிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டக்கூடிய தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | எல்லை 1 | எல்லை 2 | எல்லை 3 | எல்லை 4 | எல்லை 5 | எல்லை 6 |
| உப உணவுப் பொருட்கள் | 0 02 | 0 02 | 0 03 | 0 03 | 0 04 | 0 06 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல. இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருட்களை விற்கலாகாது.

11–1144

---

உணவு விலைக்கட்டளை இல. எம். என். எ/1964. **உப உணவுப் பொருட்கள்**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

173 ம் அத்தியாய விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (3) 2 ம் பிரிவுடன் வாசிக்கப்பட்ட 4 ம் பிரிவுடன், உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, மன்னார் மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி சந்திரசேகரம் சிவசுப்பிரமணியமாகிய நான் இக்கட்டளையால்—

(1) 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ந் திகதி பிரசுரிக்கப்பட்ட 13,744 ம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1963 ம் ஆண்டு ஆவணி மாதம் 22 ந் திகதி இட்ட இலக்கம் எம். என்/10/1963 விலைக்கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையின் முதலாம் பத்தியில் விபரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு, கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய விலையோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற 2 ம் அட்டவணையில் 2 ம், 4 ம், 6 ம் பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தொகையுடன் கூட்டி முறையே மொத்த அந்தர் ஒன்றின் மொத்த விலையாக உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட பொருட்களை இந்த விலைக்குக் கூடுதலாக முதலாம் அட்டவணையில் முறையே 1 ம், 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(3) விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின்படி இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களுக்குக் கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நிகர இருத்தலின் சில்லறை வியாபார விலையோடு இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 3 ம், 5 ம், 7 ம் பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தொகையைக் கூட்டி, நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை விலையாக உடனடியாகவே நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். 2 ம் அட்டவணையில் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள பொருட்களை இந்த விலைக்குக் கூடுதலாக 1 ம் அட்டவணையில் முறையே 1 ம், 2 ம், 3 ம் பத்திகளில் விவரிக்கப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளின் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தர் தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகக் கருதப்படும்.

(ஆ) குறித்த அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஒரு பொருளின் மொத்த அந்தர் ஒன்றிற்குக் குறைந்த எந்தத் தொகையையாவது பாவிப்பதற்கு அல்லது உபயோகிப்பதற்காக விற்றல் சில்லறை விலையாகக் கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்டுள்ள எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து எவராவது இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எந்த ஒரு இடத்திலும் விற்றலாகாது என இத்தால் ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் எப்பொருளையேனும் தம்வசத்தில் அல்லது தம் கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளின் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையை 1 அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகையில், அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்ருகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்று ஆஞ்ஞை யிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—
"இருத்தல்", "இரு." அல்லது "ரு." என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்றும் ஆஞ்ஞை யிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை விதிக்கப்பட்டுள்ள எந்த இடத்திலும் 2 ம் அட்டவணையின் 1 ம் பந்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருளை அல்லது பொருட்களை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென இத்தால் ஆஞ்ஞை யிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்கப்பட்ட பொருளின் அளவு (நிறையில்) ;
(இ) விற்ற பொருளுக்கு கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) எந்த விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(9) 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியில் விவரிக்கப்பட்ட ஏதாவது ஒரு பொருளை விற்குமிடத்து 2 ம் அட்டவணையின் 2, 3, 4, 5, 6, 7 ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருட்களை சுற்றிக் கொடுக்கப்படும் உறை அல்லது வைத்துக் கொடுக்கப்படும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென இத்தால் ஆஞ்ஞை யிடுகிறேன்.

1964 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ந் திகதி பிற்பகல் 3 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

ச. சிவசுப்பிரமணியம்,
உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி,
மன்னார் மாவட்டம்.

**முதலாம் அட்டவணை**

| விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் 1 | விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் 2 | விஸ்தீரண எல்லை அடங்கிய இடங்கள் 3 |
|---|---|---|
| மன்னார் பட்டின சங்கப் பகுதி, கிராமச் சங்கப் பகுதிகள், மன்னார் கிழக்கு, மன்னார் மேற்கு (தலைமன்னார் கி.சே. பிரிவு தவிர) எருக்கலம் பிட்டி, வங்காலை, மாந்தை தெற்கு, நானாட் டான் கிழக்கு, நானாட்டான் மேற்கு | மன்னார் தெற்கு (தலைமன்னார் கி.சே. பிரிவு) மாந்தை வடக்கு பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனியைத் தவிர) முசலி வடக்கு, முசலி மேற்கு (மறிச்சுக்கட்டி கி.சே. பிரிவைத் தவிர) | பெருங்களிப்பத்து (பெரியமடு கொலனி) இலுப் பைக் கடவை, மறிச்சுக்கட்டி, கி.சே. பிரிவு, பனங்காமம் மேற்கு மூலை |

**இரண்டாம் அட்டவணை**

| பத்தி 1<br>பொருள் விபரம் | விஸ்தீரணம் 1<br>பத்தி 2<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | விஸ்தீரணம் 1<br>பத்தி 3<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | விஸ்தீரணம் 2<br>பத்தி 4<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | விஸ்தீரணம் 2<br>பத்தி 5<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | விஸ்தீரணம் 3<br>பத்தி 6<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள மொத்த வியாபாரியின் ஒரு மொத்த அந்தரின் ஆகக்கூடிய விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. | விஸ்தீரணம் 3<br>பத்தி 7<br>கொழும்பு முனிசிப்பல் எல்லைக்குள் நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரியின் ஒரு நிகர இருத்தலின் ஆகக்கூடிய சில்லறை விலையுடன் கூட்டப்பட வேண்டிய தொகை<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|
| வெண்காயம் (சிறு வெண்காயம் சிக்பலப்பூர் வெண்காயம் தவிர) சிவப்பு வெண்காயம் உருளைக்கிழங்கு | 2 75 .. | 0 3 .. | 2 90 .. | 0 3 .. | 3 0 .. | 0 4 |
| துவரம் பருப்பு, கொத்த மல்லி, முழு உழுந்து, பாசிப்பயறு, கடலைப் பருப்பு, சிந்தாமணிக் கடலை, மைசூர்ப் பருப்பு (ரகம் 1) இறக்குமதி செய்யப்பட்டது, மைசூர் பருப்பு (ரகம் 2) உள்ளூரில் குத்தப்பட்டது, சர்க்கரை புளி | 3 75 .. | 0 4 .. | 3 90 .. | 0 4 .. | 4 0 .. | 05 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

11–1146.

இலங்கை, வாழைச்சேனை ஸிலோன் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்தற் பதிப்பிக்கப்பெற்றது.